**தலைப்பு 212 – பரீட்சைத் திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 212 - பரீட்சைத் திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் பரீட்சை திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2023 மே 11 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் பரீட்சை திணைக்களம் தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2023 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இவ் அறிக்கையின் 1.6 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினை தவிர்த்து, 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான பரீட்சைத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ் அறிக்கை 1.6 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படும்

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு

பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு/ கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பின்வரும் பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| முன்னைய ஆண்டுக்குரிய அறிக்கையின் பந்தியுடன் தொடர்பு | செயற்படுத்தப்பட்டிருக்காத பரிந்துரை | இந்த அறிக்கையில் பந்தியுடன் தொடர்பு |
|---|---|---|
| 1.6.1(இ) | திணைக்களம் அமைந்துள்ள காணியின் பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதியாகிய ரூபா 630,000,000 தொகை நிதியல்லாத சொத்துக்கள் கூற்றில் காட்டப்பட்டிருந்த போதிலும், அந்தக் காணியை திணைக்களத்திற்கு உரித்தாக்கியிருக்கவில்லை. | 1.6.1(ஆ)(i) |

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

### (அ) வருமானப் பெறுவனவுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் மாதத்திற்குரிய நிகழ்வு நிலையில் கிடைத்திருந்த, அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய ரூபா 5,384,958 இற்கான தொகை மற்றும் பரீட்சைக் கட்டணம் ரூபா 1,726,310 | எதிர் காலத்தில் குறிப்பிட்ட ஆண்டிற்கான பெறுவனவுகள் அந்த ஆண்டிலேயே கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என. | ஆண்டிற்குரிய வருமானம் சரியாக இனங் கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |

இற்கான தொகை 2022 ஆண்டின் வருமானமாக இனங் கண்டிருந்தமையால் மீளாய்வாண்டின் காசோட்டக் கூற்றில் மற்றும் நிதி செயலாற்றல் கூற்றில் கிடைத்த வருமானம் ரூபா 7,111,268 தொகை மிகையாக காட்டப்பட்டிருந்தது.

**(ஆ) ஆதனங்கள் பொறித்தொகுதிகள் உபகரணங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | திணைக்களத்தின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள பத்தரமுல்லையில் உள்ள 1.356 ஹெக்டயார் காணி 2022 திசெம்பர் 31 திகதி அளவிலும் திணைக்களத்திற்கு உரித்தாக்கியிருக்காத போதிலும் அதனை ரூபா 630,000,000 இற்கான பெறுமதிக்கு நிதியல்லாத சொத்துக்கள் கூற்றில் உட்படுத்தப்பட்டிருந்தது. | காணியை உரித்தாக்குவதற்காக கல்வியமைச்சு மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் இணைந்து ஒன்றித்த அமைச்சரவை விஞ்ஞாபனம் ஒன்று சமர்ப்பிப்பதற்கு தேவையான அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என. | காணியை உரித்தாக்குவதற்கான அலுவல்களை விரைவுபடுத்த வேண்டும். |
| (ii) | இலங்கை மஹவெலி அதிகார சபையினால் 2020 மற்றும் 2021 ஆண்டுகளில் இலங்கை பரிட்சைத் திணைக்களத்திற்கு உரித்தாக்கப்பட்டிருந்த முறையே எம்பிலிப்பிட்டிய பல்லேகம பழைய முகாம் இலக்கம் 20 என்ற இடத்தில் அமைந்துள்ள 0.0960 ஹெக்டயர் அளவிலான காணி மற்றும் கொத்மலை பிரிவிற்குரிய ரிவஸயிட் தோட்ட பங்களா மற்றும் மேலும், கட்டிடங்கள் அடங்கிய 0.328 ஹெக்டயர் அளவிலான காணியை | உரித்தாக்கப்பட்டதென உறுதிப்படுத்தல் கடிதம் கிடைத்த பின்னர் சொத்துக்கள் பதிவேட்டில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | காணி பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்கு உட்படுத்த வேண்டும். |

பெறுமதி மதிப்பீடு செய்து நிதி அல்லாத சொத்துக்கள் கூற்றில் உட்படுத்துவதற்கு 2022 ஆண்டிலும் முடியாமல் இருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 பொறுப்புக்கள் மற்றும் ஈடுபாட்டுப் பொறுப்புக்களுக்கு அணுகுதல்

பின்வரும் அதவானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆண்டில் திணைக்களத்திற்கு சொந்தமான பழைய பரீட்சை பெறுபேற்றுப் பதிவேடு ஸ்கேன் பண்ணுவதற்காக தனியார் நிறுவனம் ஒன்றுடன் ஈடுபாட்டுப் பொறுப்பொன்று ஏற்படுத்தியிருந்தது. 2021 நவம்பர் மாதத்தில் ஸ்கேன் செய்த மாதிரியொன்று திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் திணைக்களத்தினால் அதன் சரியான தன்மையை பரிசோதனை செய்து அந்த நிறுவனத்துடன், முறையான உடன்படிக்கையொன்று மேற்கொள்ள நடவடிக்கை எடுக்காமையினால், ரூபா 14,205,500 தொகையொன்று ஈடுபாட்டுப் பொறுப்பென காட்டப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட தனியார் நிறுவனத்தின் மூலம் கணினி மயப்படுத்தப்பட்டு தரவு மாதிரியினை பரிசோதனை செய்த போது இனங் காணப்பட்ட வழுக்கள் காரணமாக முறையான உடன்படிக்கையொன்றுக்கு அணுகுவதற்கு முடியாமல் இருந்தது எனவும், இது தொடர்பாக நியமனம் செய்யப்பட்ட குழுவினால் பரிந்துரைகள் பிரதான பெறுகைக் குழுவிற்கு வழங்கப்பட்டிருந்தது என. | குறிப்பிட்ட கருமம் கால தாமதம் இன்றி நிறைவேற்றி ஈடுபாட்டுப் பொறுப்புக்களில் இருந்து விடுவிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | திணைக்களத்தின் ஆறு மாடிக் கட்டிடம் நிர்மாணிப்பதற்காக மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்திற்கு 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த | 2022 திசெம்பர் 19 திகதிய இன்வொயிஸ் வழங்கள் பிரிவிற்கு 2023 ஜனவரி 26 திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்ததனால் 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு | அனைத்துப் பொறுப்புக்களும் முறையாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டிய ரூபா 7,591,878 இற்கான தொகையொன்று பொறுப்புக்கள் என நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | பொறுப்புக்கள் என உட்படுத்துவதற்கு முடியாமல் இருந்தது என. | வேண்டும். |
| (இ) | 03 உத்தியோகபூர்வ வாசஸ்தளங்களை கொள்வனவு செய்வதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு செலுத்த வேண்டிய ரூபா 1,735,046 இற்கான தொகை பொறுப்புக்கள் என காட்டப்பட்டிருக்கவில்லை. | இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது என. | அனைத்து பொறுப்புக்களும் முறைப் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டும். |

**2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **அவதானிப்புக்கள்** | | | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|---|---|
| | **சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு** | **பெறுமதி ரூபா** | **இணங்காமைகள்** | | |
| **(i)** | **பொது நிருவாகச் சுற்றறிக்கை** | | | | |
| | 2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 இலக்கம் கொண்ட பொது நிருவாகச் சுற்றறிக்கை | - | அனைத்து வாகனங்களும் 12 மாதங்களுக்கு ஒருமுறை அல்லது 25,000 கி.மீ. ஓட்டத்தின் பின்னர் எரிபொருள் எரிவு தொடர்பான பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அடுத்த வருடம் இந்த பரிசோதனை மேற்கொள்வதற்கு உரிய நடவடிக்கை தயாரிக்கப்பட்டு வருகின்றது என. | சுற்றறிக்கையின் படி செயற்பட வேண்டும். |

(ii) **அரச கணக்குச் சுற்றறிக்கை**

| | | | | |
|---|---|---|---|---|
| 2017 ஏப்ரல் 27 திகதிய 255/2017 இலக்கம் கொண்ட அரச கணக்குச் சுற்றறிக்கை | 214,685,262 | அனைத்துப் பொறுப்புக்களும் அந்த நிதியாண்டினுள்ளேயே தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு சேர்க்கப்படவில்லை. | உறுதிச் சீட்டுக்கள் தாமதமாக கிடைப்பதனால் திசெம்பர் 31 திகதிக்கு முன்னர் கொடுப்பனவு செய்ய முடியாமல் போனது என. | சுற்றறிக்கையின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 திட்டமிடல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 திகதிய 02/2020 இலக்கம் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் 03 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்காததுடன், அதற்கு நேரொப்ப பெறுகைத் திட்டமும் தயாரித்திருக்கவில்லை. | 2022 செயல் நடவடிக்கைத் திட்டத்தின் குறைபாடுகளை தவிர்ந்துகொண்டு 2023 ஆண்டிற்காக 02/2020 இலக்கம் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் படி செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டு கல்விச் செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது என. | அரச நிதிச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

**3.2 செயற்திட்டங்கள் நிறைவேற்றுவதில் தாமதங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஒப்பந்தக் கிரயம் ரூபா 564,320,835 தொகைக்கான ஆறு மாடி பல் கரும கட்டிடம் நிர்மாணிக்கும் ஒப்பந்த வேலை 2017 ஆண்டு | கட்டிடத்தின் நிர்மாண வேலைகளின் முன்னேற்றம் 91 சதவீதம் எனவும், நிர்மாண வேலைகளின் மேற்பார்வைக்காக | நிர்மாண வேலைகளின் தாமத்திற்கான காரணத்தை கண்டிறிந்து நிர்மாண வேலைகள் |

| | | |
|---|---|---|
| ஆரம்பிக்கப்பட்டு 2019 பெப்ரவரி 02 திகதி பூர்த்தி செய்வதற்காக பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், 2022 திசெம்பர் 31 திகதி அளவிலும் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன், அத் திகதி அளவில் மத்திய பொறியியல் உசாத்துணை பணியகம் மற்றும் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு முறையே ரூபா 64,858,719 தொகை மற்றும் ரூபா 304,671,983 தொகை ஆக ரூபா 369,530,702 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | குழுவொன்று நியமிக்கப்பட்டு மாதாந்தம் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் நடாத்தி நிர்மாண வேலையை விரைவுபடுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டது என. | மேலும் தாமதம் அடைதலை தவிர்த்துக்கொள்வதற்காக எடுக்க வேண்டிய அனைத்து நடவடிக்கை முறைகளையும் எடுப்பதற்காக முகாமைத்துவம் செயற்பட வேண்டும். |

### 3.3 பணம் விடுவிக்கப்பட்ட போதிலும் முன்னேற்றம் ஒன்று அடைந்திருக்காத செயற்திட்டங்கள்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 03 உத்தியோகபூர்வ வாசஸ்தளங்கள் கொள்வனவு செய்வதற்காக 2020 மற்றும் 2021 ஆண்டுகளின் போது ரூபா 32,965,888 இற்காக தொகையொன்று நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு செலுத்தியிருந்த போதிலும், 2022 திசெம்பர் 31 திகதி அளவிலும் பரீட்சை திணைக்களத்திற்கு அந்த உத்தியோகபூர்வ வாசஸ்தளங்களின் உரிமையை பெற்றுக்கொள்வதற்கு முடியாமல் இருந்தது. | இறுதிக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது எனவும் மற்றும் அதன் பின்னர் உரித்தாக்கும் அலுவல்களில் ஈடுபடுத்தப்படும் என. | உத்தியோகபூர்வ வாசஸ்தளங்களை உரித்தாக்குவதற்காக குறிப்பிட்ட நிறுவனங்களுடன் கலந்துரையாடி உரித்தாக்கும் அலுவல்களை விரைவுபடுத்த வேண்டும். |

### 3.4 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 திகதிய 02/2020 இலக்கம் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் பந்தி 10.2 இற்கு இணங்க அரச நிதித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டிருந்த வழிகாட்டல் இலக்கம் 14 இல் குறிப்பட்டிருந்த படிவத்தின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பித்திருக்கவில்லை. | சமர்ப்பிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது என. | அரச நிதிச் சுற்றறிக்கையின் படி செயற்பட வேண்டும். |

### 3.5 அரச உத்தியோகத்தர்கள் பிணை வைத்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 880 இற்கு இணங்க அரச பணம், வருமான முத்திரை அல்லது பொருட்கள் பெற்றுக்கொள்ளல் மற்றும் வழங்குதல் தொடர்புடைய நிருவாக ரீதியாக பொறுப்பான அல்லது அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களும் அரச செலவுகளுக்குரிய உறுதிச் சீட்டுக்கள் சான்றுபடுத்தும் காசோலைகள் கையொப்பமிடும் ஆட்களும் தனது கடமைகள் அலுவல்களை நேர்மையாக நிறைவேற்றப்படுகின்றது என அரச உத்தியோகத்தர்களின் பிணை | நிதிப் பிரமாணம் 891(1) இற்கு இணங்க பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களுக்காக பிணைப் பதிவேடொன்று தயாரிப்பதற்காக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என. | நிதிப் பிரமாணம் மற்றும் குறிப்பிட்ட சுற்றறிக்கைகளுக்கு அமைவாக செயற்பட வேண்டும். |

கட்டளைச் சட்டத்திற்கு இணங்க பிணை வைக்கப்படல் வேண்டிய போதிலும், திணைக்களத்தில் மேற்கூறிய பொறுப்புக்கள் வகிக்கும் உத்தியோகத்தர்கள் எவரும் பிணை வைத்தல் மேற்கொண்டிருக்கவில்லை.

அதேபோல் பிணை வைக்க வேண்டிய தொகை மற்றும் பிணை வைக்க வேண்டிய முறையினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் என அமைச்சுச் செயலாளருக்கு மேற்கொள்ள முடியுமென காட்டப்பட்டிருந்த போதிலும் திணைக்களத்தில் அறிக்கை தினம் வரை அவ்வாறான தீர்மானம் ஒன்று எடுத்திருக்கவில்லை.

### 3.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வினாத் தாள்களின் சிறந்த நேர்த்தியயை பெற்றுக் கொள்வதன் மூலம் பரிட்சாத்திகளின் நம்பகத் தன்மையை அதிகரிப்பதற்கு மற்றும் இரகசிகத் தன்மையை உச்ச அளவில் பாதுகாக்கும் குறிக்கோளுடன் பரீட்சை திணைக்களத்தினால் வினாத்தாள்கள் அச்சிடுவதற்காக பயன்படுத்தப்பட்ட பழைய இயந்திரத்திற்கு பதிலாக ரூபா 546,264,452 இற்கான செலவொன்று மேற்கொண்டு 2018 | அச்சு இயந்திரத்திற்காக கடதாசி பெற்றுக்கொள்ளும் வசதியீனங்கள், உகந்த மின் வழங்கல் பெற்றுக்கொள்ள முடியாமை, மை பெற்றுக்கொள்ள முடியாமை, பல்வேறு தொழில்நுட்ப சிக்கல்கள் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டிருந்தது. | திணைக்களத்தின் தேவைப்பாட்டிற்கு பொருந்தக்கூடிய விவரக் குறிப்பு தயாரித்தல் அதற்கு பொருத்தமான கொள்வனவு செய்யப்படுகின்றது என உறுதிப்பத்திக்கொள்வதற்கு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நவம்பர் மாதத்தில் வெப் டிஜிடல் அச்சு இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டிற்கான வினாத் தாள்கள் அச்சிடும் போது பழைய இயந்திரத்தின் மூலம் 18,881,727 தொகையான வினாத்தாள்கள் அச்சிடும் போது புதிய இயந்திரத்தை பயன்படுத்தி 690,125 வினாத் தாள்கள் மாத்திரம் அச்சிடப்பட்டிருந்தது. அவை அச்சிடப்பட்ட மொத்த வினாத் தாள்களில் 3.5 சதவீதமான குறைந்த சதவீத்தினை கொண்டிருந்தது. | | |
| | மேலும், வெப் டிஜிடல் அச்சு இயந்திரத்திற்காக வினாத் தாள்களின் இரகசியத் தன்மையை பாதுகாப்பதற்காக Wrapping Solution பகுதி 2018 ஆண்டு ரூபா 8,428,637 தொகை செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்ட போதிலும், எதுவித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் கொள்வனவு செய்த நாள் முதல் விளைவற்று காணப்பட்டது. | திணைக்களத்தில் தற்போது பயன்படுத்தப்படுகின்ற இரகசிய பதிவேடு பொதி செய்தல் செய்முறையுடன் Wrapping Solution பகுதி பொருந்தாமையால் இந்த இயந்திரத்தின் பகுதியை பயன்படுத்தி வினாத் தாள்களை பொதி செய்யும் அலுவல்கள் மேற்கொள்ள முடியாமல் இருந்தது என. | இந்த கொள்வனவின் மூலம் அரசுக்கு ஏற்பட்டிருந்த நட்டம் உரிய பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களிடம் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2005 ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த பெறுமதி கண்டறிய முடியாத Slitch Master Gathering and wire Stiching machine இலக்கம் 32(001279) கொண்ட இயந்திரத்தை செயற்படுத்தும் போது தாள்கள் வெளியே எறியப்படுவதனால் மீளாய்வாண்டு இறுதி வரை பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. | இயந்திரத்தை செயற்படுத்தும் போது தாள்கள் வெளியே எறியப்படுதல் நடைபெறுவதனால் பயன்படுத்த முடியாமல் உள்ளது. | கொள்வனவு செய்வதற்கு முன்னர் சாத்தியக் கூறு ஆய்வு மேற்கொள்ள வேண்டியதுடன், குறிப்பிட்ட கருமத்திற்காக பயன்படுத்தக்கூடிய நிலைமையை ஏற்படுத்துவதற்கு கொள்வனவு செய்திருந்த நிறுவனத்திடம் கலந்துரையாடி |

| | | |
|---|---|---|
| | | பயன்படுத்தக்கூடிய நிலைமைக்கு மாற்றுவதற்கு முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட வேண்டும். |

**3.7 முகாமைத்துவ பலவீனங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிறுவனங்களின் பரீட்சைகள் நடாத்துவதற்காக 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 09 அரச நிறுவனங்களிடம் ரூபா 38,203,407 தொகை திணைக்களத்திற்கு அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டதுடன், செலவுகளை அறவீடு செய்வதற்கான குறிப்பிட்ட செய்முறை ஒன்றுடனான அறிவுரைகள் வழங்கும் படி பரீட்சை திணைக்களத்தினால் திறைசேரியிடம் கோறியிருந்தது. | இந்தத் தொகையில் 2023 ஜூலை 30 திகதி அளவில் ரூபா 615,013 தொகை அறவீடு செய்யப்பட்டிருந்ததெனவும், மீதித் தொகையை அறவீடு செய்வதற்காக நிதி அமைச்சின் அறிவுரை பெறப்படும் என. | எழுத்துமூல ஆலோசனைகள் திறைசேரியிடம் பெற்றுக்கொள்ள வேண்டும். |
| (ஆ) | திணைக்களத்தினால் ஏனைய அரச நிறுவனங்களுக்காக நடாத்தப்படும் பரீட்சைகளுக்கான முழுத் தொகையும் அல்லது முற்பணத் தொகையொன்று பெற்றுக்கொள்ளாமல் 2021 மற்றும் 2022 ஆண்டுகளில் நடாத்தப்பட்ட 10 பரீட்சைகளின் பெறுபேறுகள் வெளியிடப்பட்டிருந்தது. | 2 பரீட்சைகளுக்கான பணம் அறவீடு செய்யப்பட்டது என. | பெறுபேறுகள் வெளியிடுவதற்கு முன்னர் பணம் பெற்றுக்கொள்ளும் செய்முறை ஒன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2019 ஒக்தோபர் 03 திகதிய EST/07/EXAMS/05/2018 கொண்ட கடிதத்தின் மூலம் திருத்தப்பட்ட புதிய கட்டணப் புத்தகத்தின் பந்தி இலக்கம் 01 இன் படி இரகசிய ஆவண அலுவல்களில் ஈடுபடுவதற்காக செலுத்தப்படும் மாதாந்த இரகசிக கொடுப்பனவு ஒரு வருடத்தில் 06 மாதங்கள் உச்சமட்ட வரையறையாக செலுத்தப்பட வேண்டிய போதிலும் அந்த கொடுப்பனவு உத்தியோகத்தரின் மாதாந்த சம்பளத்துடன் கூட்டி 12 மாதங்களுக்காக ரூபா 628,456 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன என. | மிகையாக செலுத்தப்பட்ட பணம் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | பரீட்சை சான்றிதழ்களில் பெயர் திருத்தத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த விண்ணப்பங்களை கவனத்தில் எடுத்து அந்த பெயர் மாற்றங்களை மேற்கொண்ட சந்தர்ப்பத்திலேயே அந்த திருத்தத்தை இணையத்தில் உட்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிபுணர் ஆலோசனை மீது தரவுகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக பிரதான கணினி முறைமை மற்றும் நிகழ்வு நிலை சேவை முறைமை, வலையமைப்பின் மூலம் தொடர்புபடுத்தப்படவில்லை. அதற்கு தேவையான தொழில்நுட்ப உபகரண மென்பொருள் திணைக்களத்தில் காணப்படவில்லை. | பெயர்கள் திருத்திய சந்தர்ப்பங்களிலேயே இணைத்தில் உட்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | 2018 ஆண்டு ரூபா 28,500,000 தொகை செலவிடப்பட்டு 250 கிலோவொட் இற்கான சூரிய வலுச்சக்தி முறைமையொன்று பரீட்சை திணைக்களத்தில் நிறுவப்பட்டிருந்த போதிலும் பராமரிப்புச் சேவை வழங்குதல் தொடர்பாக வழங்குனருடன் உடன்படிக்கை கையொப்பமிட்டிருக்கவில்லை. | 7 வருடங்கள் வரை அறவீடுகள் மேற்கொள்ளாமல் பராமரிப்புச் சேவை வழங்குவதற்கு இணங்கியிருந்தது என. | விலைகூறல் ஆவணங்களின் படி 2 வருடங்கள் மாத்திரம் இலவசமாக சேவை வழங்குவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் காரணமாக பராமரிப்பு நிறுவனத்துடன் சேவை வழங்குவதற்கான |

| | | |
|---|---|---|
| | | உடன்படிக்கை கையொப்பமிடப்பட வேண்டும். |

**4. மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணியை இணக்கம் செய்த போது சிரேஷ்ட மட்டத்தின் 15 உத்தியோகத்தர்களும் மூன்றாம் மட்டத்தில் 12 உத்தியோகத்தர்களும், இரண்டாம் மட்டத்தில் 173 உத்தியோகத்தர்களும் மற்றும் ஆரம்ப மட்டத்தில் 18 உத்தியோகத்தர்கள் என 218 வெற்றிடங்கள் காணப்பட்டது. | சிரேஷ்ட மட்டம், மூன்றாம் மட்டம் மற்றும் இரண்டாம் மட்ட உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்காக பொது நிருவாக அமைச்சுக்கு கோறிக்கை விடுக்கப்பட்டுள்ளதுடன், திணைக்களம் சார் நியமனங்கள் தொடர்பாக ஆட்சேர்ப்பு அலுவல்கள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது எனவும், தற்காலிக நிரந்தர நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ள 80 ஊளியர்களுக்கு நிரந்த நியமனக் கடிதங்கள் வழங்கும் படி கோறிக்கை விடுக்கப்பட்டுள்ளது. | அத்தியவசிய பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |